# திராவிடப் பொங்கல் விழாவுடன் மலரட்டும் புத்தாண்டு - 2026

## ‘உங்களில் ஒருவன்’ கடிதம்!...

முதல் பக்கத் தொடர்ச்சி

தன் வாழ்நாளில், அரசியல் கருத்து மாறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு அதை நிறைவேற்றிக் காட்டியவரும் அவர்தான்.

**வாழ்நாளெல்லாம் தமிழர்களின் உரிமைக்காகவும் - உயர்வுக்காகவும் பாடுபட்டு, தமிழ்மொழி காத்திட களத்தில் நின்று போராடி, தமிழுக்குச் செம்மொழித் தகுதி கிடைக்கச் செய்து, நவீனத் தமிழ்நாட்டைக் கட்டமைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் “தொகுதிகள் தோறும் அவரது சிலை நிறுவப்படும்” எனத் தீர்மானித்து 16-7-2021 முதல் 15-12-2025 வரை கழகத்தின் சார்பில் 40க்கும் மேற்பட்ட முழு உருவச் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.**

அண்மையில் திருவண்ணாமலை மாவட்டத்திற்குச் சென்றபோது, அங்கு திறந்து வைக்கப்பட்ட நம் உயிர்நிகர்த் தலைவர் அவர்களின் சிலைகளுடன் சேர்த்து, அந்த மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை திறக்கப்பட்டுள்ளது.

திருச்சி தெற்கு மாவட்டத்திலும், மயிலாடுதுறை மாவட்டத்திலும் அனைத்துத் தொகுதிகளிலும் தலைவர் கலைஞர் அவர்களின் சிலைகள் திறக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் பல தொகுதிகளில் முத்தமிழறிஞர் கலைஞரின் சிலைகள் தயார் நிலையில் உள்ளன. திராவிட இயக்கத்தின் தனிப்பெரும் விழாவாக, தமிழர் திருநாளாகப் பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடச் செய்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!.

**ஜனவரி 14-15 ஆகிய நாட்களில் தமிழ்நாடு முழுவதும் ஊராட்சிகள்-வார்டுகள் அளவில் மகளிரைத் திரட்டி - சாதி, மத ஏற்றத்தாழ்வற்ற ‘திராவிடப் பொங்கல்’ வைத்துக் கொண்டாட வேண்டும். அனைத்து வீடுகள் முன்பும், ‘சமத்துவம் பொங்கட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!’ என்ற முழக்கங்களுடன் ‘திராவிடப் பொங்கல்’ கோலமிட்டு, பெண்களும் குழந்தைகளும் பங்கேற்கும் வகையிலான சிறுசிறு போட்டிகளை நடத்திப் பரிசளிக்க வேண்டும்.**

**தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், தமிழரின் பண்பாட்டு அடையாளமான பொங்கல் நன்னாளைக் கழகத்தின் சார்பில், 2026 புத்தாண்டு தொடக்கத்திலிருந்தே ‘திராவிடப் பொங்கல்’ விழாவை, சமூகநீதிக்கான கொண்டாட்டமாக உடன்பிறப்புகள் முன்னெடுக்க வேண்டும் என ‘உங்களில் ஒருவன்’ என்ற உரிமையுடன் கேட்டுக்கொள்கிறேன்.**

கழக நிர்வாகிகள் தங்களுடன் பணியாற்றும் உடன்பிறப்புகளுக்குப் பொங்கல் பரிசுகள் வழங்கி மகிழ்வதுடன், தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்றிடும் வகையில் கலை - இலக்கிய நிகழ்வுகளை நடத்திட வேண்டும். குறிப்பாக, இளைய தலைமுறை ஆண்களும் பெண்களும் கலந்துகொள்ளும் விளையாட்டுப் போட்டிகளைச் செம்மையாக நடத்தி, வெற்றியாளர்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கும் பரிசுகளை வழங்கிட வேண்டும்.

**மாநிலம் முழுவதும் கழகத்தின் சார்பில் மூன்று கட்டங்களாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும். கபடி, கிரிக்கெட், வாலிபால், கால்பந்தாட்டம், ஓட்டப் பந்தயம், மிதிவண்டிப் போட்டி, ‘கோ-கோ’ என ஆண்-பெண் இருபாலருக்கும் தனித்தனியாக விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.**

ஒவ்வொரு பிரிவினருக்கும் குறைந்த பட்சம் 3 விளையாட்டுப் போட்டிகளை, ஒருங்கிணைந்த ஒன்றியம், ஒருங்கிணைந்த நகரம், ஒருங்கிணைந்த பகுதி (மண்டல) அளவில் ஜனவரி 3-ஆம் நாள் முதல் ஜனவரி 9 வரை நடத்திட வேண்டும்.

கலந்துகொள்ளும் அனைத்து அணிகளும் www.dravidapongal.in என்ற தளத்தில் பதிவு செய்திட வேண்டும்.

இதில் வெற்றிபெற்ற அணிகளைக் கொண்டு, ஜனவரி 10-ஆம் நாள் முதல் பொங்கல் திருநாள் வரை - கழக மாவட்ட அளவிலான போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்கிட வேண்டும்! கழக மாவட்ட அளவில் வெற்றி பெறும் அணிகளைக் கொண்டு பிப்ரவரி மாதத்தில், மாநில அளவிலான பிரம்மாண்டப் போட்டிகள் நடைபெறும்.

**ஜனவரி 14-15 ஆகிய நாட்களில் தமிழ்நாடு முழுவதும் ஊராட்சிகள்-வார்டுகள் அளவில் மகளிரைத் திரட்டி - சாதி, மத ஏற்றத்தாழ்வற்ற ‘திராவிடப் பொங்கல்’ வைத்துக் கொண்டாட வேண்டும். அனைத்து வீடுகள் முன்பும், ‘சமத்துவம் பொங்கட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!’ என்ற முழக்கங்களுடன் ‘திராவிடப் பொங்கல்’ கோலமிட்டு, பெண்களும் குழந்தைகளும் பங்கேற்கும் வகையிலான சிறுசிறு போட்டிகளை நடத்திப் பரிசளிக்க வேண்டும்.**

ஜனவரி 16-17 ஆகிய இரு நாட்களும் ஊரின் பொதுவான இடத்தில் தமிழர் பெருமை சொல்லும் கலை - இலக்கிய விழாக்களை நடத்துவதுடன், திரை அமைத்து, திராவிட மாடல் அரசின் பொங்கல் சிறப்புச் செய்தியை அனைவரும் காணும்படி செய்யவேண்டும். இந்த நிகழ்வுகளை ஒன்றிய-நகர-பகுதிக் கழகச் செயலாளர்களும் சார்பு அணிகளின் நிர்வாகிகளும் இணைந்து எழுச்சியுடன் நடத்துவதற்கான முழு விவரங்களும் தலைமைக் கழகத்தால் மாவட்டக் கழகங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

அந்த வழிகாட்டுதல்களின்படி, **திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கிடும் வகையிலும், தமிழர்கள் அனைவரும் பங்கேற்றிடும் வகையிலான கலை - இலக்கிய - விளையாட்டுப் போட்டிகளுடன் திராவிடப் பொங்கல் விழாவை ஊர்தோறும் சிறப்பாக நடத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

பிறக்கின்ற புத்தாண்டு 2026 - அது, திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்திடும் ஆண்டு!

இருளில் பிறக்கும் புத்தாண்டை விடியச் செய்யும் உதயசூரியன் போல, தமிழ்நாட்டின் விடியல் வெளிச்சமாகக் கழக ஆட்சி தொடர்ந்திடும்! அனைவருக்கும் மீண்டும், உங்களில் ஒருவனான என்னுடைய இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

அன்புடன்,

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
மார்கழி 16
31-12-2025.

---

### தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும்

# முத்திரைத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

**சென்னை, ஜன. 1–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (30.12.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, எரிசக்தி துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை மற்றும் பொதுப்பணித் துறை ஆகிய துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு அரசின் முத்திரை திட்டங்களின்** (Iconic Projects) **முன்னேற்றம் குறித்து தொடர்புடைய துறைச் செயலாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

மாநிலத்தின் சமூகப் பொருளாதார கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பல்வேறு அரசு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் பெரிய அளவிலான பயன்தரக் கூடிய உள்கட்டமைப்பு திட்டங்களான முத்திரைத் திட்டங்களை குறித்த காலத்திற்குள் திட்டமிட்டபடி நிறைவேற்றுவதற்கும், பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கும் அத்திட்டங்களின் முன்னேற்றத்தினைத் கண்காணித்திட தொடர்ந்து ஆய்வுக் கூட்டங்கள் முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் அரசு தலைமைச் செயலாளர் ஆகியோரால் நடத்தப்பட்டு வருகிறது.

**அடையாளம் காணப்பட்ட 288 முத்திரைத் திட்டங்கள்**

அரசின் 24 நிர்வாகத் துறைகளைச் சேர்ந்த சுமார் ரூ.3,17,693 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 288 திட்டங்கள் முத்திரைத் திட்டங்களாக அடையாளம் காணப்பட்டு அதன் செயல்பாட்டினை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் 85 திட்டங்கள் இதுவரை முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**முதலமைச்சர் முத்திரைத் திட்டடங்கள் குறித்த ஆய்வு**

கடந்த 22.12.2025 அன்று முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், 6 துறைகளைச் சார்ந்த சுமார் 87,941 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான செயல்பாட்டில் உள்ள 27 முத்திரைத் திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து தொடர்புடைய துறைச் செயலாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் (30.12.2025) நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம், எரிசக்தி துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை மற்றும் பொதுப் பணித் துறை ஆகிய 6 துறைகளைச் சார்ந்த சுமார் 58,740 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான செயல்பாட்டில் உள்ள 27 முத்திரைத் திட்டங்களின் பணி முன்னேற்றத்தினை முதலமைச்சர் அவர்கள் தொடர்புடைய துறைச் செயலாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

**சிவகங்கை மினி டைடல் பூங்கா, சூலூர் பாதுகாப்பு உபகரண உற்பத்தி பூங்கா, ஓரகடம் மருத்துவ சாதனங்கள் பூங்கா மற்றும் கோயம்புத்தூர் பொது பொறியியல் வசதி மையம் அமைக்கும் பணிகள் குறித்து ஆய்வு**

இவ்வாய்வுக் கூட்டத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறையின் கீழ் சிவகங்கையில் அமைக்கப்பட்டுள்ள மினி டைடல் பூங்கா பணிகள் முடிக்கப்பட்டுள்ள தாக துறைச் செயலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. சூலூர் பாதுகாப்பு உபகரண உற்பத்தி பூங்கா மற்றும் ஓரகடம் மருத்துவ சாதனங்கள் பூங்கா அமைக்கும் பணிகள் ஜனவரி மாதத்திற்குள்ளும், கோயம்புத்தூர் பொது பொறியியல் வசதி மையம் அமைக்கும் பணி பிப்ரவரி, 2026-க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

**உடன்குடி அனல் மின் திட்ட (அலகு I) அமைக்கும் பணிகள் குறித்து ஆய்வு**

எரிசக்தி துறையின் கீழ், 13,076.71 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் 2x660 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி அனல் மின் திட்ட (அலகு I) பணிகள் ஜனவரி, 2026-க்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டுமெனவும், வரும் கோடை காலத்தில் மாநிலம் முழுவதும் தடையின்றி சீரான மின்சாரம் வழங்குவதை உறுதி செய்திட வேண்டுமென்றும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

**திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனைப் பணிகள் குறித்து ஆய்வு**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ், 110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனைப் பணிகள் பிப்ரவரி 2026-க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

**நீலகிரி சூழல் பூங்கா உள்ளிட்ட பிற முத்திரை திட்டங்கள் குறித்து ஆய்வு**

சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறையின் கீழ், நீலகிரியில் சூழல் பூங்கா அமைப்பதற்கு பிப்ரவரி 2026-க்குள் அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள்துவங்கப்படுமென துறைச் செயலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. இதுதவிர, இத்துறைகளால் செயல்படுத்தப்பட்டு வரும் பிற முத்திரைத் திட்டங்களையும் விரைந்து முடித்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி. வே. அமுதவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நூறு நாள் வேலை திட்டத்தை சிதைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, பெரம்பலூர், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு செ.நல்லதம்பி, ந.ஜெகதீஷ்வரன் ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள். இதில் எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. தலைமையேற்று சிறப்புரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் தங்க.சித்தார்த்தன், தமுதாழை.பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், ஆர்.முருகேசன், செ.ரவிச்சந்திரன், மகாதேவிஜெயபால், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர், எஸ்.செல்வக்குமார், எஸ்.அழகுவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் ஒன்றிய வடக்கு தெற்கின் சார்பில் பா.ஜ.க. அரசு. 100 நாள் வேலை திட்டத்தை ரத்து செய்ததை கண்டித்து. வடக்கு ஒன்றிய செயலாளர். ரெயின்போ நடராஜன். தெற்கு ஒன்றிய செயலாளர் மாணிக்கம். தலைமையில் சேலம் ஒன்றிய அலுவலகத்தின் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மதச்சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.